**பண்டாரவெல மா நகர சபை**
**பதுளை மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆண்டிற்கான நிதிக்கூற்றுகள் 2018 ஏப்ரல் 02 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்டம்பர் 26 ஆந் திகதி மாநகர முதல்வருக்கு அனுப்பட்டிருந்தது.

### 1.2 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3, 3.4(உ), 3.6 பந்திகளில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக பண்டாரவெல மாநகர சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பொறியும் பொறித் தொகுதி கணக்கின் மீதி ரூபா 241,540 இனால் மிகையாக காட்டப்பட்டுள்ளது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 3,600,000 தொகை, எனினும் அதனை ரூபா 17,480,695 தொகை என கணக்கீடு செய்திருந்தமையால் வருமானம் ரூபா 13,880,695 இனால் மிகையாகக் காட்டப்பட்டடுள்ளது.

(இ) மீளாய்வாண்டிற்கான தண்டப்பண வருமானம் ரூபா 300,000 தொகை எனினும், அது ரூபா 116,772 தொகை என கணக்கீடு செய்திருந்தமையினால் நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 183,228 தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின்போது கொள்வனவு செய்திருந்த நூலகப் புத்தகங்களின் பெறுமதி ரூபா 307,253 தொகை எனினும் அதனை ரூபா 247,506 தொகை என கணக்கீடு செய்திருந்தமையினால் நூலகப் புத்தகங்களின் கணக்கு ரூபா 59,747 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் போது காணிகள் மற்றும் கட்டிடங்கள் பெறுமதி ரூபா 804,564 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஊ) பலவின வைப்புக் கணக்கில் ஆரம்ப மீதி ரூபா 8,478,100 தொகை எனினும், அதனை ரூபா 8,118,138 தொகை என முன் கொண்டுவந்திருந்த காரணத்தினால் பலவின வைப்புக்கள் ரூபா 359,962 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவை நீர்க்கட்டணம் ரூபா 5,659,295 தொகை எனினும் அதனை ரூபா 56,592,995 தொகை என கணக்கீடு

செய்திருந்தமையினால் நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 50,933,700 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நிலையான வைப்பு வட்டி ரூபா 1,062,500 தொகை கணக்கீடு செய்திருந்தமையினால் நடைமுறை சொத்துக்கள் அந்த பெறுமதியினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) திரண்ட நிதியின் கணக்கின் ஆரம்ப மீதி ரூபா 87,735,869 தொகை எனினும் அதனை ரூபா 117,299,233 தொகை முன் கொண்டுவரப்பட்டிருந்தமையால் திரண்ட நிதியக் கணக்கு ரூபா 29,563,364 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஒ) திரண்ட நிதியக் கணக்கில் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 192,764,865 தொகை எனினும் அதனை ரூபா 124,045,688 தொகை என காட்டப்பட்டிருந்தமையினால் திரண்ட நிதியக் கணக்கு ரூபா 68,719,177 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஓ) விசாகா மாவத்தை மரக்கறி மொத்த விற்பனை நிலையத்தில் வருட இறுதியில் உள்ளவாறு நிலுவை வாடகை வருமானம் ரூபா 2,794,798 தொகை எனினும், அதனை ரூபா 750,042 தொகை எனக் கணக்கீடு செய்திருந்த காரணத்தினால் நடைமுறை சொத்துக்கள் ரூபா 2,044,756 இனால் குறைவாக் காட்டப்பட்டிருந்தது.

(ஔ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மாட்டு இறைச்சிக் கடை வாடகை வருமானம் ரூபா 3,517,933 தொகை எனினும் அதனை ரூபா 612,443 தொகை என கணக்கீடு செய்திருந்தமையால் ஆண்டிற்கான வருமானம் ரூபா 2,905,490 இனால் மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் அந்த பெறுமதியினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(க) 2015 மே 11 திகதி சீவலி பாதை கடைத் தொகுதி நிர்மாணிக்கும் நிர்மாண வேலைக்காக முற்பணமாக செலுத்தியிருந்த ரூபா 6,163,460 தொகை நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்காமையினால் நடைமுறை சொத்துக்கள் அப்பெறுமதியினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ய) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இருப்பு பதிவேட்டின் பிரகாரம் பொது களஞ்சிய இருப்பு ரூபா 3,288,701 தொகை எனினும் அதனை ரூபா 2,231,096 தொகை என கணக்கீடு செய்திருந்த காரணத்தினால் மிகை ரூபா 1,057,605 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்கு

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 92,939,738 தொகை 05 கணக்குகள் தொடர்பான மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய துணைப்பதிவேடுகள் மற்றும் திரட்டுக்களில் காட்டப்பட்டுள்ள மீதிகள் இடையே காணப்பட்ட வித்தியாசங்களின் கூட்டுத்தொகை ரூபா 12,348,711 தொகையாகும்.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 149,273,620 தொகையான பெறவேண்டிய கணக்கு மீதியில் 05 வருடங்களுக்கான ஏனைய வருமான நிலுவைகள் ரூபா 131,578,046 தொகை, 03 வருடங்களுக்கான நிலுவை வீதவரி ரூபா 8,993,104 தொகை, 03 வருடங்களுக்கான நிர்மாண

வேலைகளுக்காக கிடைக்க வேண்டிய ரூபா 8,702,470 தொகை என அடங்கியுள்ளன.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 17,724,295 தொகையான செலுத்த வேண்டிய மீதியில் 03 வருடங்களையுடைய கடன் கொடுத்தோர்கள் ரூபா 8,094,615 தொகையினால் மற்றும் நிர்மாண வேலை கடன் கொடுத்தோர் ரூபா 9,629,680 தொகையினைக் கொண்டிருந்தது.

### 1.3.4 கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூலச் சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் சமர்பிக்கப்பட்டமையால் கூட்டுத்தொகை ரூபா 6,494,862 தொகைக்கான 02 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்தல் செய்வதற்கு முடியாதிருந்தது.

### 1.3.5 இணக்கமின்மைகள்

#### 1.3.5.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை

சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா. | |
| (அ) மாநகர சபைச் கட்டளைச் சட்டம் | | |
| (i) பிரிவு 42 | -- | 54 அங்கீகாரமற்ற நிர்மான வேலைகள் தொடர்பாக சட்டரீதியாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை |
| (ii) பிரிவு 218 | | 2014, 2015 ஆண்டுகளுக்காக நிருவாகம் தொடர்பாக விரிவான அறிக்கையொன்று சபைக்கு சமர்ப்பிக் கப்பட்டு 06 வாரங்களுக்குள் அமைச்சருக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | (ii) | பிரிவு 254 | 36,360,603 | ஏதேனும் வீதவரி ஒன்று வரியொன்று, வாடகையொன்று, கட்டணமொன்று, வருமாண வரியொன்று, தண்டப்பன மொன்று அல்லது ஏதேனும் கொடுப்பனவு ஒன்று மாநகர சபைக்கு அறவிடப்பட வேண்டிக் காணப்படும் போது அவற்றை அறவீடு செய்து மாநகர சபை நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்ட வேண்டுமெனினும் அவ்வாறு செய்திருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவைகள் அத்தியாயம் XIX பிரிவு 4:1 | | | கடமையாற்றும் இடத்தில் இருந்து ஏதேனும் தூர அளவில் வசிக்கும் நிரந்தர வீடு ஒன்று உரிய மற்றும் 5 வருடங்களை விட கூடுதலான காலம் அரசாங்க உத்தியேகபூர்வ வாசஸ்தல ங்களை பயன்படுத்தி உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களை பெறுவதற்கு உரிமை இல்லாத 3 உத்தியோகத்தர் களுக்கு வீடுகள் வழங்கப்பட்டிருந்தது. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | | |
| | (i) | நி.பி 571 | 344,837 | காலங்கடந்துள்ள 19 வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | (ii) | நி.பி 751 | 47,480 | கலஞ்சியப் பொருட்கள் பெற்றுக் கொள்ளல் மற்றும் வழங்குதல் ஆகிய விபரங்கள் அடங்கும் விதமாக இருப்பு பதிவேடுகள் பதியப்பட்டு பேணப்பட வேண்டும் எனினும், அனைத்து கலஞ்சிய பொருட்கள் பெற்றுக் கொள்ளல்கள் மற்றும் வழங்குதல் உரிய முறையில் கணித்து இருப்புப் பேரேடு களஞ்சியப் பேரேடுகளில் ஒழுங்காக நாளது வரை ஆக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 இலக்கம் கொண்ட பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கை | | சபைக்கு சொந்தமான 29 வாகனங்களின் எரிபொருள் எரிதல் பரிசோதனை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2015 ஜுலை 10 திகதி PFD/ASD/02/veh-circular - 2015 இலக்கம் கொண்ட நிதி சுற்றறிக்கை | | சபைக்கு சொந்தமான சேதமடைந்த மற்றும் பயன்படுத்த முடியாத 05 வாகனங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஊ) | 2009 செப்டம்பர் 18 ஆம் திகதிய PF/437 ஆம் இலக்க பொது நிதி அமைச்சுச் செயலாளரின் சுற்றறிக்கை | 33,960 | சபைக்கு சொந்தமான 03 வாகனங்களுக்காக காப்புறுதி முகவாளர்கள் மூலமாக காப்புறுதிப் பத்திரம் பெறப்பட்டுள்ளது. |
| (எ) | 1980 திசெம்பர் 31 திகதியில் 1980/46 ஆம் இலக்க உள்ளுராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை | | மாநகர சபை காணி வீதவரி எல்லையில் வீதவரி வட்டாரம் 1 முதல் 9 வரை புதிதாக பெறுமதி மதிப்பீடொன்று ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை மேற் கொள்ளப்படா திருந்ததுடன் 2007 ஆண்டிற்கான பெறுமதி மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டிலும் வீதவரி அறவிடப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 93,183,576 தொகை ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 39,383,629 தொகையாக காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம் சிட்டையிடப்பட்ட வருமானம் சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காக சமர்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டை இடப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| வருமான மூலம் | 2017 மதிப்பீட்டு வருமனம் | 2017 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2017 சேகரித்த வருமானம் | 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2016 மதிப்பீட்டு வருமனம் | 2016 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2016 சேகரித்த வருமானம் | 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) வீதவரி மற்றும் வரி | 26,405,000 | 26,405,000 | 21,163,827 | 12,561,003 | 25,605,986 | 25,605,986 | 19,459,086 | 11,877,312 |
| (ii) வாடகை | 33,032,000 | 33,032,000 | 22,965,516 | 28,147,202 | 29,821,000 | 29,821,000 | 23,355,791 | 16,579,366 |
| (iii) அனுமதிப் பத்திரக் கட்டணம் | 7,810,000 | 7,810,000 | 7,957,957 | (147,957) | 8,700,000 | 8,700,000 | 8,577,852 | 122,148 |
| (iv) ஏனைய வரு மானங்கள் | 19,019,000 | 19,019,000 | 25,551,453 | (4,199,645) | 153,774,000 | 153,774,000 | 127,634,693 | 39,039,191 |
| மொத்தம் | 86,266,000 | 86,266,000 | 77,638,753 | 36,360,603 | 217,900,986 | 217,900,986 | 179,027,422 | 67,618,017 |

**2.2.2 வருமானம் சேகரித்தல்கள் செயலாற்றுகை**

2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த சிட்டை இடப்பட்ட வருமானம் ரூபா 86.2 மில்லியன் ஆக காணப்பட்டதுடன், ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 77.6 மில்லியன் ஆகும். எவ்வாறாயினும் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 36.3 மில்லியன் வருமானம் ஒன்று அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது நிலுவை வருமானம் 46 சதவீதத்தினால் குறைந்திருந்தது.

**2.2.3 வீதவரி மற்றும் வரி**

**நிலுவை நீர் சிட்டை வருமானம்**

தந்திரிய பதன நீர் செயற்திட்டத்தின் கீழ் பண்டாரவெள பிரதேச சபையினால் 2013 அக்தோபரில் சபைக்கு சாட்டப்பட்டிருந்த 10 நீர் வழங்கள் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூபா 163,043 தொகை மற்றும் நீர் நுகர்வுக் கட்டணம் ரூபா 565,929 தொகை 2017 திசெம்பர் 31 திகதி வரையும் அறவீடு செய்திருக்கவில்லை.

**2.2.4 நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 65,000 முத்திரைக் கட்டணம் ரூபா 6,820,000 தொகை ஆகும்.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை**

மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் மக்கள் சுகாதார பொதுப் பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பெருந் தெருக்கல் தொடர்பான விடயங்கள் முறைப்படுத்தல், நிர்வாகித்தல் பொது மக்களின் சுகபோக வாழ்வு, வசதிகள், நலனோம்பு ஆகியன சபையினால்

நிறைவேற்றப்பட வேண்டியிருந்த கடமைகளை நிறைவேற்றுதல் தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) செயல் நடவடிக்கை திட்டம்**

மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

**(ஆ) செயற்பணிகளை நிறைவேற்றுவதில் தாமதம்**

பின்வரும் செய்பணிகளை நிறைவேற்றுவதில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

| | செய்பணி | மதிப்பீட்டுக் கிரயம் | உடன்படிக் கைத் திகதி | செலுத்தியிருந்த முற்பணம் | 2017.12.31 திகதியில் உள்ளவாறு தாமதக் காலம் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா. | | ரூபா. | |
| (i) | மொத்தச் சந்தை BLOCK-01 | 128,309,769 | 2014.09.09 | 22,179,396 (முற்பணம் மற்றும் பகுதிக் கொடுப்பனவு) | 38 மாதங்கள் |
| (ii) | Others work-03 (வடிகால் முறைமை) | 33,456,186 | 2014.08.26 | 3,929,215 | 18 மாதங்கள் |
| (iii) | குளம் நிர்மாணித்தல் (Reservoir) | 10,033,680 | 2014.08.27 | 4,108,704(i,ii பகுதிக் கொடுப்பனவு) | 22 மாதங்கள் |
| (iv) | சீவலி பாதை வர்த்தக கடைத்தொகுதி நிர்மாணித்தல் | 42,823,373 | 2015.04.09 | 6,163,160 | 08 மாதங்கள் |

**(இ) நிலை பேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் மீது சபை அறிந்திருக்காத காரணத்தினால் அக் குறிக்கோள்களுக்கான உலகளாவிய குறிகாட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்க்கை தரத்தை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்டகால திட்டங்கள் 2018 ஜூலை 31 திகதி வரையும் தயாரித்திருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ திறமையின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 08 வாகனங்களின் மைலோ மீற்றர்கள் செயற்படாத நிலையில் காணப்பட்டது.

(ஆ) 2017 ஆண்டின் போது சபையின் மக்கள் சுகாதார பரிசோதகரினால் நிறைவேற்றிய கடமை குறிப்பிடாமல் இருந்த போதிலும் போக்குவரத்துப் படி மேலதிக நேர மற்றும் விடுமுறை நாள் சம்பளமாக மீளாய்வாண்டின் போது ரூபா 381,902 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**3.3 மனித வள முகாமைத்துவம்**

**(அ) ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 48 வெற்றிடங்கள் மற்றும் மிகை ஊழியர்கள் 07 காணப்பட்டனர்.

**(ஆ) பதவியணிக் கடன்கள்**

தற்போது சேவையில் இல்லாத 04 ஊழியர்களிடம் அறவிடவேண்டியிருந்த ரூபா 43,215 தொகை மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.4 செயற்பாட்டு திறமையின்மை**

(அ) 2007 ஆண்டின் பின்னர் சபையின் வீதவரி பெறுமதி மதிப்பீடு ஒன்று செய்திருக்காததுடன் 2017 ஆண்டில் கடை வாடகையின் ஒருபகுதி மாத்திரம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 02 வகையான பண்டங்கள் தொடர்பாக பேரேட்டின் பிரகாரம் மற்றும் பௌதீக ரீதியில் மெய்மையாய்தல் மீதியில் ரூபா 40,880 களுக்காக பற்றாக் குறையும், 02 வகையான பண்டங்கள் தொடர்பாக பேரேட்டின் பிரகாரம் மற்றும் பௌதீக மீதி இடையே ரூபா 6,600 இற்காக மிகையொன்று காணப்பட்டது.

(இ) மதிப்பளிக்கப்படாத காசோலைகளை பதிவு செய்வதற்காக மதிப்பளிக்கப்படாத காசோலை பதிவேடு ஒன்று பேணியிருக்கவில்லை.

(ஈ) சபைக்கு எதிராக வெளி தரப்பினரினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த 08 பல்வேறு வழக்குகள் 2017 திசெம்பர் 31 அளவிலும் முடிவுற்றிருக்கவில்லை.

(உ) சபையினால் 2014 மற்றும் 2015 ஆண்டுகளின் போது செயற்படுத்திய 04 நிர்மாண வேலைகளுக்கான முற்பணமாக ரூபா 36,380,475 தொகை ஒப்பந்த காரர்களுக்கு வழங்கியிருந்த போதிலும் குறிப்பிட்ட ஒப்பந்தக்காரர்கள் ஒப்பந்த வேலைகளை கைவிடப்பட்டிருந்த காரணத்தினால் முற்பணங்களை அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது. மேலும் அந்த ஒப்பந்தக்காரர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும் சபைக்கு முடியாதிருந்தது.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**இருப்புக் கட்டுப்பாடு**

(அ) 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு களஞ்சியப் பேரேடு மற்றும் பௌதீக இருப்பு தெரிவுப் பரிசோதனையின் போது 04 பண்ட வகைகளில் ரூபா 47,480 வித்தியாசம் ஒன்று நிரூபணமாகியது.

(ஆ) நிதிப் பிரமாணம் 752 இன் பிரகாரம் பண்டங்கள் கொள்வனவு தொடர்பாக அனைத்து பதிவுகளும் பண்டப் பதிவேட்டு உறுதிச் சீட்டு ஒன்றின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டியதுடன், பெறுவனவு மற்றும் வழங்கள் ஆகிய இரண்டு வகையான கொடுக்கல் வாங்கல்களும் தொடர் இலக்கம் இடப்பட்டு கலஞ்சியப் பேரேடுகளின் பதிவு செய்யப்பட வேண்டுமெனினும், கலஞ்சிய பதிவேடுகளில் பதியப்படாத 14 வகையான பண்டங்கள் காணப்பட்டதுடன் அவற்றின் பெறுமதி ரூபா 188,737 தொகையாக இருந்தது.

**3.5.1 உரித்தாக்கப்பட்ட சொத்துக்கள்**

2015 ஆண்டிற்காக பண்டம் கணிப்பீட்டின் பிரகாரம் வெளி தரப்பினருக்கு வழங்கியிருந்த சபைக்கு சொந்தமான மடிக் கணிணி ஒன்றை திருப்பி எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.5.2 விளைவற்ற சொத்துக்கள்**

ஓட்ட நிலையில் இருந்து அகற்றப்பட்டிருந்த 06 வாகனங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.5.3 நூலக வாசிப்புப் புத்தகங்கள் குறைவாக இருத்தல்**

நூலகத்திலிருந்து வழங்கப்பட்டு திருப்பி ஒப்படைக்க வேண்டிய காலத்தை மிகைத்திருந்த மொத்த புத்தகங்களின் எண்ணிக்கை 150 ஆக இருந்ததுடன், அவற்றின் பெறுமதி ரூபா 37,793 தொகை ஆகும்.

**3.5.4 வருடாந்த பண்டக் கணிப்பீடுகளின் விதப்புரைகளை செயற்படுத்தப்படாமை**

2016 ஆண்டிற்கான பண்டக் கணிப்பீட்டு சபையின் விதப்புரைகளின் பிரகாரம் சுட்டிக்காட்டியிருந்த 2012, 2013, 2014 மற்றும் 2015 ஆண்டுகள் முதல் காணப்படும் பண்டங்கள் மற்றும் உபகரணங்கள் பற்றாக்குறை தொடர்பாக சபையினால் எதுவித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

**3.5.5 வாகனப் பயன்பாடு**

உள்ளூராட்சி நிறுவனங்களின் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் 2015 பெப்ரவரி 19 திகதி சபைக்கு கிடைத்திருந்த கப் வண்டியின் பெறுமதி ரூபா 6,390,000 தொகை காணப்பட்டதுடன், 9,311 கி.மீ ஓடியதன் பின்னர் 2015 ஏப்ரல் 09 விபத்துக்கு உள்ளாகியிருந்தது. பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) விபத்துக்கள் தொடர்பாக நி.பி 104(2),104(3),104(4),105(2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) விபத்து ஏற்பட்டு மீளாய்வாண்டு இறுதி அளவில் இரண்டு ஆண்டுகள் கழித்திருந்த போதிலும் அதற்கான இழப்பீட்டுக் காப்புறுதி மூலம் மீளளிப்பு செய்திருக்காததுடன், வாகனம் பழுதுபார்க்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வாகனத்தை பழுதுபார்த்தல் விடயத்திற்காக ரூபா 4,184,490 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்த தொகைக்கு பொறுப்பு சொல்ல வேண்டிய தரப்பினரிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திக்கவில்லை.

(ஈ) 2015 மார்ச் மாதம் முதல் இதுவரை வாகனம் கொழும்பு தனியார் கராஜ் ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(உ) விபத்திற்கு பொறுப்பு சொல்ல வேண்டியவர்களை இனங்கண்டிருக்கவில்லை.

### 3.6 தென்படக்கூடிய முறைகேடுகள்

(அ) (i) சபையின் பாதை ஒன்றிற்கு ஏற்படுத்திய நட்டமொன்றிற்காக ஒப்பந்தக்காரர் ஒருவரிடம் நட்டஈடு ஒன்றாகக் கிடைத்திருந்த ரூபா 4 மில்லியனிற்காக காசோலை ஒன்று கணக்கீடு செய்யாமை மற்றும் செல்லுபடியாகும் காலப்பகுதியில் வங்கியில் வைப்புச் செய்யாமல் வைத்திருந்தமையினால் காசோலை மதிப்பளிக்கப்படாமல் போயிருந்ததுடன், காசோலை தொடர்பான ரூபா 04 மில்லியன் தொகையினை ஒப்பந்தக்காரரிடம் அறவீடு செய்யமுடியாமல் போயிருந்தது.

(ii) பாதை ஒன்று நிர்மாணிப்பதற்காக ரூபா 4,492,086 தொகைக்காக முதலாவது கொடுப்பனவு சிட்டை காணாமல் போகச் செய்தல் தொடர்பாக முறைசார் விதமாக விசாரணை மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.7 பெறுகை

#### 3.7.1 பெறுகைத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக பெறுகைத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

#### 3.7.2 கொம்பெகடா வாகனமொன்று கொள்வனவு செய்தல்

ரூபா 9.5 மில்லியன் தொகை செலவிடப்பட்டு சபைக்கு கொம்பெக்டர் வண்டி ஒன்று கொள்வனவு செய்திருந்ததுடன், அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வாகனத்தை கொள்வனவு செய்வதற்கு முன்னர் சபையின் வருடாந்த பாதீட்டின் மூலம் ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்கவில்லை.

(ஆ) தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விவரக் குறிப்புக்களுக்கு முரணாக இந்த வண்டி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 5.3.3 இன் பிரகாரம் பெற்றிருந்த விலைமனு பாதுகாப்பு பிணைமுறி பெறுகைக் குழுவின் அறிக்கை, பெறுகை விளம்பரம் மற்றும் உள்ளவாறான விலைமனு பதிவேட்டுடன் ஒப்பீடு செய்தபோது அவற்றில் ஒன்றிற்கு ஒன்று வித்தியாசமான பெறுமதிகள் காட்டப்பட்டிருந்தது.

#### 3.7.3 ஒப்பந்த நிருவாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் நகர முதல்வரினால் பெறுகைக் குழு மற்றும் தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழு ஒன்று நியமனம் செய்யும் படி மாகாண அமைச்சரவை யினால் வேண்டியிருந்த போதிலும், அது நிறைவேற்றப்படாமையினால் 2014 செப்தெம்பர் 10 திகதி ரூபா 434,469,751 தொகை பெறுமதியான நிர்மாண வேலை ஒப்பந்த வேலை சபையின் பெறுகைக் குழுவினால் ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) (i) மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவுகள் 228 மற்றும் 229 இன் பிரகாரம் மற்றும் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் பந்தி 2:14:1 இன் பிரகாரம் ரூபா 200 மில்லியன் தொகையை மிகைக்கும் ஒப்பந்த வேலைகள் அமைச்சரவை பெறுகை குழுவின் கீழ் செயற்படுத்த வேண்டுமெனினும், மொத்த சந்தை நிர்மாண வேலை பகுதிகளாக்கப்பட்டு சபையினால் ஒப்பந்தவேலை வழங்கப்பட்டிருந்தது.

(ii) இந்த நிர்மாண வேலை ஒப்பந்த வேலையின் கீழ் block 01 செயற்திற்கான மதிப்பீட்டுத் தொகை ரூபா 128,309,770 தொகை எனினும், ரூபா 88,634,140 தொகை தனியார் ஒப்பந்த வேலை தரப்பினர் உடன் 2014 செப்டம்பர் 10 திகதி உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு ரூபா 22,179,397 இற்காக முற்பணம் வழங்கப்பட்டிருந்த போதிலும், 2018 ஆகஸ்ட் அளவிலும் கட்டிடத்தின் அத்திவாரம் வெட்டுதல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(iii) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் பெறுகைகள் வழிகாட்டல் கோவை 7:9:2 இன் பிரகாரம் வேலைகள் தொடர்பாக ஒப்பந்த வேலைகள் பொறியியல் மதிப்பீட்டுடன் விலைமனுக்களை (Bid) இணக்கஞ் செய்தபோது மதிப்பீட்டை விட முறைப்பிரகாரம் குறைவடையும் சந்தர்ப்பங்களில் விலைமனு கூறுவலைகளில் நியாயமான மதிப்பாய்வு மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும் Block 01 செயற்திட்டம் தொடர்பாக அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.

(iv) Block 01 இல் செயற்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 2015 செப்டம்பர் 09 திகதி வேலை பூர்த்தி செய்யப்பட்ட வேண்டுமெனினும் 2018 ஆகஸட் அளவில் 03 வருடங்களை மிகையான காலம் தாமதித்திருந்ததுடன் செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது.

**(இ) வடிகால் முறைமைகள் தயாரித்தல் Block 3**

---

சபையினால் மதிப்பீட்டு மற்றும் உடன்பட்ட தொகை ரூபா 33,456,186 தொகை ஆகிய மொத்தச் சந்தை (Block 04,06,07 உட்பட) வடிகால் முறைமை நிர்மாணித்தல் தனியார் கம்பனி ஒன்றுடன் ரூபா 80,507,769 தொகைக்கு 2014 ஆகஸ்ட் 26 ஆந் திகதி உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு 2015 செப்டம்பர் 19 திகதி வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டுமெனினும், இது வரை இந்த நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்காததுடன் அதற்காக ரூபா 3,929,215 தொகை முற்பணம் ஒன்றும் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) குளம் நிர்மாணித்தல்

---

பண்டாரவெல மொத்த சந்தைக்கு அண்மையில் உள்ள குளத்தை நிர்மாணிப்பதற்காக தனியார் கம்பனி ஒன்றுடன் பொறியியல் மதிப்பீடு மற்றும் உடன்படிக்கை தொகை ரூபா 10,033,680 இற்காக 2014 ஆகஸ்ட் 27 திகதி உடன்படிக்கை மேற்கொண்டு 2015 ஆகஸ்ட் 26 ஆம் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டுமெனினும், இது வரை அவ் வேலைப் பகுதி நிறைவேற்றப் பட்டிருக்காததுடன் அந்த கம்பனிக்கு முற்பணமாக ரூபா 4,108,704 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(உ) மொத்த சந்தை 3,4,6 மற்றும் 7 செயற்திட்டங்கள் 2018 ஆகஸ்ட் அளவிலும் வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) சீவலீ பாதையில் கடைத் தொகுதி நிர்மாணித்தல்**

கடையினால் 2015 ஏப்ரல் 29 திகதி ஒப்பந்தக் காரருடன் சிவில பாதைக் கடைத் தொகுதி நிர்மாணிப்பதற்காக ரூபா 30,815,863 இற்கான பெறுமதிக்கு உடன்படிக்கை மேற்கொண்டிருந்ததுடன் அது தொடர்பாக கணக்காய்வில் பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டிருந்தன.

i. நிர்மாண வேலைக்காக 20 சதவீதம் முற்பணம் என 2015 மே 08 திகதி ரூபா 6,163,172 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

ii. உடன்படிக்கையின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதி வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், இதுவரை குறிப்பிட்ட நிர்மாண வேலை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

iii. செயலாற்றுகை பிணை முறியின் மூலம் முற்பணத் தொகை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்து ஒப்பந்த வேலையை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

iv. சீவலி பாதை நிர்மாணிப்பதற்காக அணைகள் வெட்டிய காரணத்தினால் சபையின் உத்தியோக பூர்வ வாசஸ்தளத்திற்கு முற்றாக சேதங்கள் ஏற்பட்டிருந்ததுடன், அதற்காக நட்டத்தை பெறுமதி மதிப்பீடு செய்து அறவீடு செய்திருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

சபையின் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டில் பாதீட்டு வருமானம் மற்றும் செலவுகள் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகள் உடன் இணக்கஞ் செய்த போது கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீட்டு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைகைள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதுடன், பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமை | | குறைபாடு |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | (i) | ஆரம்ப கணக்கு மீதிகள் இணங்காமை. |
| (ஆ) | கடன்கொடுத்தோர் மற்றும் கடன் படன்பட்டோர் | (i) | கடன் கொடுத்தோர் மற்றும் கடன்பட்டோர் மீதிகள் தீர்க்கப்படாமை |
| | | (ii) | கடன்பட்டோர் மீதிகளை உறுதிப்படுத்தல்கள் பெற்றுக் கொள்ளாமை |
| | | (iii) | நிலுவை வருமானத்தை அறவீடு செய்யாமை |
| (இ) | வருமான நிருவாகம் | (i) | நிலுவை வருமானம் அறவீடு செய்யும் முன்னேற்றம் பலவீனமாக இருத்தல். |

| | | | |
|---|---|---|---|
| | | (ii) | புதிய பெறுமதி மதிப்பீடுகளின் மீது வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமை. |
| (ஈ) | நிலையான சொத்துக்கள் | (i) | காணி கட்டிடங்களை சரியாக பெறுமதி மதிப்பீடு செய்யாமை. |
| | | (ii) | நிலையான சொத்துகள் பதிவேடு நாளது வரை ஆக்கப்பட்டமை. |
| (உ) | இருப்புக் கட்டுப்பாடு | (i) | இருப்புப் பதிவேடு சரியாகப் பேணப்படாமை. |
| | | (ii) | பௌதீக இருப்பு மீதிகள் மற்றும் இருப்பு பதிவேடு இணங்காமை |
| (ஊ) | ஒப்பந்த நிர்வாகம் | (i) | ஒப்பந்த காலத்தில் நிர்மாண வேலையை பூர்த்தி செய்வதற்காக நடவடிக்கை எடுக்காமை |